# பொதுக்காலம் 33ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே! இன்று பொதுக்காலம் 33ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில், நம் இறைமகன் இயேசு கிறிஸ்து, "நீங்கள் ஏமாறாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்" என்றுரைத்த இறைவார்த்தை இன்று நம்மை சிந்திக்க அழைக்கின்றது. கிறிஸ்து மிகத் தெளிவாகவே நம் மனநிலையை அறிந்திருப்பதால் அன்றே இந்த வார்த்தையை நமக்காக கொடுத்துச் சென்றிருக்கின்றார். நமக்காக மண்ணகத்தில் மனுவுருவெடுத்து, மாபெரும் இறையன்புப் பணிகளாற்றி, இறையாட்சியை மலரச் செய்து, மாந்தர்கள் ஒவ்வொருவரும் மீட்பு பெற வேண்டுமென்பதற்காக, தன் உயிரையே பலியாகத் தந்தவரை, "இது என் உடல், இது என் இரத்தம், இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று தம்மை நற்கருணை வடிவில் நமக்காக என்றும் காத்திருப்பவரை இன்று நாம் பலரின் தவறான போதனைகளால் மறந்து, அவர்களின் ஏமாற்றுப் போதனைகளில் நம் விசுவாசத்தை விட்டு விலகியவர்களாக பல்வேறு சபைகளை நாடிச் சென்று கொண்டிருக்கின்றோம். அப்படி செல்வதற்கு சில வேண்டாத விவாதங்களை, கருத்துக்களைச் சொல்லி நம்மையே நாம் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம். "கிறிஸ்துவின் பொருட்டு அருள் கூர்ந்து உங்களை அழைத்த அவரை விட்டுவிட்டு இவ்வளவு குறகிய காலத்தில் வேறு ஒரு நற்செய்தியை ஏற்றுக் கொண்டு விட்டீர்களே" என்றும், மேலும், "நீங்கள் ஏற்றுக் கொண்ட நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை யாராவது அறிவித்தால் அவர்கள் சபிக்கப்படுக" என புனித பவுல் கலாத்தியர் திருமுகத்தில் தெளிவாகக் கூறுகின்றார்.

இரண்டாவதாக, "என் பொருட்டு உங்களை அரசரிடமும், ஆளுநரிடமும் இழுத்துச் செல்வார்கள், சிறையில் அடைப்பார்கள், இவை எனக்குச் சான்று பகர உங்களுக்கு வாய்ப்பளிக்கும்" என்ற இறைவார்த்தை தரும் அழைப்பு, நம் வாழ்க்கை கிறிஸ்துவுக்கு சான்று பகரக்கூடிய விதத்தில் அமைய வேண்டும் என்பதுவே. "வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" என பவுலின் இறைவார்தையை நம் வாழ்வாக்கிட வேண்டும். அத்தகைய ஒரு ஒப்பற்ற மனநிலை, நம்மையே முழுமையாக சரணாகதியாக்குகின்ற மனநிலையுள்ளவர்களாக, அவருக்காக எதையும் இழக்கின்றவர்களாக, அவரன்பு வழியின் அடிச்சுவட்டிலே நம் பார்வையை பதிய வைத்து, அவனியெங்கும் அவர் நாமம் ஓங்கிடச் செய்து, அவருக்கு சான்று பகரும் வாழ்க்கை வாழ்ந்திடுவோமேயானால், நாம் வாழ்வின் நாளை எதிர்நோக்கி இருப்போம்,

இல்லையேல் அந்த நாள் அழிவு நாளாகத்தான் இருக்கும். மன உறுதியுடன் இருந்து நம் வாழ்வை காத்துக் கொள்ள இறையாசீர் வேண்டி இத்திருப்பலியில் இணைந்திடுவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. வார்த்தையே வாழ்வான இறைவா,

உம் வார்த்தையை ஏற்று, நம்பிக்கையுடன் வாழ்ந்த ஆபிரகாமைப் போல, உம் வார்த்தையை ஏற்று, தன்னையே அர்ப்பணித்த அன்னை மரியைப்போல, நாங்களும் இறைவனின் வார்த்தையை வாசிப்பதோடு இருந்துபோகாது, அதை வாழ்வாக்கி, முப்பது, அறுபது, நூறு மடங்கு பலன் தருபவர்களாக, இறைவனுக்கு உகந்தவர்களாக, இறை நம்பிக்கையிலே தளர்ந்திடாது, பாறைமீது கட்டப்பட்ட வீட்டைப்போல விசுவாசத்தில் உறுதியுடனிருந்து, இறையன்பை எங்கள் வாழ்வில் பிரதிபலிப்பவர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வழிகாட்டும் தெய்வமே இறைவா,

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், தன்னலமின்றி, பொதுநல நோக்குடன், மக்களுக்குத் தேவையான பல நல்ல வளர்ச்சிப் பணிகளைச் செய்திடவும், உண்மையுடனும், நேர்மையுடனும், நீதியுடனும் செயல்படவும், லஞ்ச, ஊழலற்ற நிர்வாகத்தினை பின்பற்றவும், வறுமை, ஏழ்மையில் துயருறும் மக்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்களைச் செய்து, நல்ல வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தந்து, மக்கள் வாழ்வை வளம் பெறச் செய்திடக்கூடிய பரந்த, தன்னலமற்ற, உள்ளத்தைப் பெற்றிட, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. அமைதியின் தெய்வமே இறைவா,

சாதி, மத, இனவெறியால் இன்று பல வன்முறைகள், தீவிரவாதங்கள்; மேலோங்கி, குண்டுவெடிப்புகளும், கொலை, கொள்ளைகளும் மக்களின் வாழ்வில் நிம்மதியற்ற நிலையை உருவாக்கி வருகின்ற இந்த உலகில், தவறான அத்தகைய நிலைகள் மாறிடவும், மறந்து, மறைந்து, மரத்துப்போன, மனிதநேய பண்புகள் இம் மண்ணில் மலர்ந்திடவும், உமது அமைதி இவ்வுலகில் எங்கும் நிறைந்திடவும் உமது அருளால் காத்திடவும் வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அற்புதங்களின் நாயகனே இறைவா,

தீராத, பல்வேறு உடல், உள்ள நோய்களினால் துன்புறும் நோயாளிகள் ஒவ்வொருவரையும் உம் பாதம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்கள் வாழ்வில் செய்த பாவங்களை உம் பேரன்பினால், இரக்கத்தினால் மன்னித்து, அவர்களின் நோய்களைக் குணமாக்கி, பரிபூரண சுகம் தந்து, உம் அற்புதங்களையும், அதிசயங்களையும் உணர்ந்து, இறை விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாக, உமக்கு தம் வாழ்வில் என்றும் நன்றியறிந்த மக்களாக, உமக்கு நல்சாட்சிகளாக வாழ்ந்திடக்கூடிய, நல்இதயத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. “இதோ! நான் புதியன செய்கிறேன்” என்ற இறைவா,

எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், உமக்குகந்தவர்களாக வாழ முடிவெடுத்து, செயற்பட முற்படும்போதெல்லாம், ஊனுடலின் பலவீனம், வலுவின்மையினால், மீண்டும், மீண்டுமாக பாவமென்னும் சேற்றில் வீழ்ந்து, உமதன்பை, இரக்கத்தை, மன்னிப்பை எங்களுக்குச் சாதகமாக மாற்றி வாழும் நிலையகற்றி, எங்கள் வலுவின்மையிலே உமது வல்லமையை சிறந்தோங்கச் செய்து, தூய ஆவியின் வல்லமையில், வழிகாட்டுதலில், பாவ வாழ்வை முற்றிலுமாக வேரோடு களைந்தெறிந்து, புதுப்படைப்பாக, நாங்கள் ஒளியின் பாதையில் என்றும் பயணப்படக்கூடிய, தூயதோர் உள்ளத்தை, தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com